1967 ஜூன் 23]

முகாகிப்பிடாரியூர்.

ஒற்றைப்பாறை.

அம்மாப்பாளையம்.

திரு. செ. பாலசுப்ரமணியன் : இக் குடிதண்ணீர்த் திட்டத்தைக் காங்கயத்திற்கு விஸ்தரிக்கும் நோக்கம் சர்க்காருக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

திரு. ஈ. எம். நடராசன் : கோவை மாவட்டம் அந்தியூர் நகரப் பஞ்சாயத்திற்குப் பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

Dr. H. V. HANDE : What is the amount earmarked for this scheme?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : The estimated cost is Rs. 42.45 lakhs installed and Rs. 1,72,000 to maintain.

திரு. என். துரைபாண்டியன் : நாங்குனேரிக் குடிதண்ணீர்த் திட்டம் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

சிதம்பரம் புதை சாக்கடைத் திட்டம்

*62. வின.—திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் பாதாள சாக்கடை நிறுவும் திட்ட வேலை தற்போது எந்த நிலைமையிலுள்ளது?

(இ) எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) சிதம்பரம் புதைவடிகால் திட்டம் தனித்தனிக் கழிவு நீர்ப்பகுதிகளைக் கொண்ட மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு வடி நீர் இறைக்கும் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. ஒரு மண்டலத்தில் வடிகால் திட்ட வேலை ஏறத்தாழ முடிவு பெறும் நிலையிலுள்ளது. மற்ற இரு மண்டலங்களிலும் வேலை நடைபெற்று வருகிறது.

(இ) இத்திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1967 ஜூன் 23

மு.ப. 10-00 DR. H. V. HANDE : What is the arrangement for the disposal of the sewage water?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, புதிதாக எத்தனை நகரங்களில் சாக்கடைத் திட்டம் அமைப்பதாக இந்த அரசு கருதியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கோவையில் பஞ்சாலைகள் மூடப்பட்டதும், தொழிலாளர் பிரச்சினையும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அவையின் அலுவலை ஒத்தி வைப்பதற்கு அனுமதி கோரி, திரு. கே. என். குமாரசாமி அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தை இப்பொழுது படிப்பார்கள்.

* திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அவசர மானதும், பொது முக்கியத்துவம் வாய்ந்ததும், நியாயமானதுமான அடியிற்கண்ட விஷயத்தை விவாதிப்பதற்காக சபையின் அலுவல் களை ஒத்திவைக்க வேண்டுமென்று இதன் மூலம் அறிவிப்புக் கொடுக்கிறேன்.

"கோவை மாவட்டத்தில் அண்மையில் மில்கள் மூடப் பட்டு அதனால் பாதிக்கப்பட்டுள்ள 10,000 தொழிலாளரைத் தவிர, மேலும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகி யுள்ளதை விவாதிக்க ஒத்தி வைப்பு தீர்மானத்தைக் கொடுத்திருக் கிறேன்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி ஒதுக்கும் மசோதா நிறை வேற்றப்படும் வரையில் தனி உறுப்பினர்களின் தீர்மானங்களையும், ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள நடைமுறையில் இடம் இல்லை என்பதை, ஏற்கெனவே திரு. கருத் திருமன் அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது 20—6—1967-லும், திரு. சுப்பராஜா அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது 22—6—1967-லும் தீர்ப்பு அளிக்கிறபோது, விரிவாக விளக்கப்படுத்தியிருக்கிறேன். அரசினருக்கு நிதி ஒதுக்கு கின்ற வரையில், பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளிவைக்கும் தீர்மானங்கள் கொண்டுவரக் கூடாது என்பதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. பேரவை, நிதியைக் கொடுத்தால்தான்,